விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 149 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 03 செவ்வாய்க்கிழமை (17.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தமிழர்களின் தீர்வுக்காக ரணிலுடன் பேசுவோம்

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்



(கொழும்பு)
தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாகரனின் வீட்டில் இருந்து

### முள்ளிவாய்க்கால் பேரணி ஆரம்பம்



03

## முள்ளிவாய்க்காலில் கண்காணிப்பு தீவிரம்

### பொலிஸ், இராணுவம் ரோந்து

(முல்லைத்தீவு)
முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளை இடம்பெறவுள்ள நிலையில், முள்ளிவாய்க் 15

மே 18 முதல்

## எரிவாயு விநியோகம்

### லிட்ரோ நிறுவனம்

(கொழும்பு)
மே 18ஆம் திகதி முதல் எரிவாயுவை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லிட்ரோ நிறு 15

## பொம்மை அரசில் இணையோம்

### ஜே.வி.பி அதிரடி

(கொழும்பு)
ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகிக்கும் எந்தவொரு அரசாங்கத்திலும் தாங்கள் 15

# மோசமான நாட்களை சந்திக்கப் போகிறோம்

### அனைவரும் ஒத்துழைப்பு தாருங்கள் நாட்டு மக்களிடம் பிரதமர் கோரிக்கை



(கொழும்பு)
மிக மோசமான நாட்களை நீங்களும் நாங்களும் சந்திக்கப் போகின்றோம். உயிரைப் பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம்கொடுப்பேன். இந்தச் சவாலை வெற்றி கொள்வேன், அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் தாருங்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

விமானத்தில் ஏறாதவர் கூட

## ஸ்ரீலங்கன் விமான சேவையின் நட்டத்தை அனுபவிக்கின்றனர்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)
ஒருமுறைகூட விமானத்தில் ஏறாதவர்களும் ஸ்ரீலங்கன் விமான சேவையின் நட்டத்தை அனுபவிக்கின்றனர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
நாட்டு மக்களுக்கு நேற்று திங்கட்கிழமை ஆற்றிய உரையின்போதே 15

காலிமுகத்திடல், அலரிமாளிகை வன்முறை

## 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 22 பேரைக் கைது செய்க

### குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு சட்டமா அதிபர் பணிப்பு

(கொழும்பு)
காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகை வளாகத்தில் இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பில் 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் 15

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப புதிய அரசுக்கு பூரண ஆதரவு

### ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

(கொழும்பு)
தற்போதைய அரசாங்கத்தினால் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் சிறப்பான செயல்களுக்கு பூரண ஆதரவை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி ஏகமனதாக தீர்மானித்துள்ளது. 15

## பொலிஸ் தலைமையகத்துக்கு முன் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)
காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட அரச ஆதரவாளர்களை கைது செய்யு 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## எரிவாயு...

வனம் அறிவித்துள்ளது.

இரண்டு எரிவாயு கப்பல்களுக்கான கொடுப்பனவாக 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இன்றைய தினம் செலுத்தப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

3700 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் இன்று காலை நாட்டை வந்தடையவுள்ளதாக அதன் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மற்றொரு கப்பல் நாளை நாட்டை வந்தடைய உள்ளது. இரண்டு கப்பல்களுக்கும் இன்று பணம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

இதற்கமைய, எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதி முதல் தினசரி 80 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லிட்ரோ தெரிவித்துள்ளது. (ம)

## பொருளா...

நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அக்கட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை கவர்ந்திழுக்க கட்சியின் அடிப்படைக் கொள்கைக்குப் புறம்பாக ஆளும் கட்சிக்கு உறுப்பினர்களை உள்வாங்க முற்பட்டால் ஆதரவை இடைநிறுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## தமிழர்களின்...

புதிய அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண ஆதரவினை வழங்குவது என்பது இதன் அர்த்தம் கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் நலனுக்காகவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கும் வகையிலும் அரசாங்கம் முன்வைக்கும் திட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவினை வழங்கும் என இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க முன்பு பிரதமராக இருந்தபோதும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவருடன் நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளமையினால் அவர் வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நன்கு அறிந்திருப்பார் என்றும் கூறியுள்ளார்.

மேலும் வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பகிர்வு என்கின்ற விடயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடாக இலகுவாக முன்னெடுக்க முடியும் என்றும் இரா.சம்பந்தன் நம்பிக்கை வெளியிட்டார்.

எனவே பலமான அரசாங்கம் ஒன்று கட்டியெழுப்பப்பட்ட பின்னர் அவருடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தி தீர்வினை காண்போம் என்றும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார். (ம)

## 4 பாராளுமன்ற...

உள்ளிட்ட 22 பேரை கைது செய்யுமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, சனத் நிஷாந்த, சஞ்சீவ எதிரிமான்ன, மிலான் ஜயதிலக்க மற்றும் மேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 22 பேரை கைது செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

22 சந்தேக நபர்கள் தொடர்பில் நேரடி, சூழ்நிலை மற்றும் தொழில்நுட்ப சாட்சியங்கள் இருப்பின் அவர்களை உடனடியாக கைது செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்படும் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

சந்தேகநபர்கள் அவர்களின் முகவரிகளில் இல்லாவிடில், சாட்சியங்களை முன்வைத்து அவர்களைக் கைது செய்வதற்கு நீதவான் ஒருவரிடமிருந்து திறந்த பிடியாணையைப் பெற வேண்டும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்லது உரிய முகவரிகளில் காணப்படாத சந்தேக நபர்களைக் கைது செய்ய பொதுமக்களின் உதவியை நாடவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தேக நபர்கள்,

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, சஞ்சீவ எதிரிமான்ன, மிலான் ஜயதிலக்க, தேசபந்து தென்னகோன் (மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்), டான் பிரியசாத், மகிந்த கஹந்தகம, நாலக விஜேசிங்க, பந்துல ஜெயமான்ன, தினேத் கீதக, சமன்லால் பெர்னாண்டோ, அராபி வசந்த, சுபாஷ் (தெஹிவளை நகர சபை), அமல் சில்வா, சமீர சதுரங்க ஆரியரத்ன, ருவன்வெல்லே ரமணி, துசித ரணபாகு, சஜித் சாரங்க, புஷ்பலால் குமாரசிங்க, நிஷாந்த மெண்டிஸ், புஷ்பகுமார (முன்னாள் இராணுவ சிப்பாய்), சவின் பெர்னாண்டோ (வென்னப்புவ) ஆவர்.

ஏற்கெனவே பயணத்தடை பெற்றவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு சட்டமா அதிபர் திணைக்களம் மேலும் அறிவுறுத்தியுள்ளது. (ம)

## பொலிஸ்...

மாறு கோரி நேற்று பொலிஸ் தலைமையகத்திற்கு முன் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட அரசாங்கத்தின் ஆதரவாளர்களை கைது செய்யுமாறு கோரி சோசலிச இளைஞர்கள் சங்கம் பொலிஸ் தலைமையகத்திற்கு முன்னால் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

## முள்ளிவாய்க்...

கால் நினைவுத்தூபி அமைந்துள்ள வளாகத்தைச் சூழ இராணுவம், பொலிஸார் நிறுத்தப்பட்டு கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவுத்தூபி அமைந்துள்ள வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பினை சேர்ந்தவர்கள் மற்றும் பொதுமக்களால் ஏற்பாட்டுப் பணிகள் நேற்று நண்பகல் முதல் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது நேற்று மாலை முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பந்தல் அமைக்க முற்பட்ட ஏற்பாட்டுக்குழுவிற்கு பொலிஸார் தடைவிதித்துள்ளதுடன், உரிய அனுமதிகளை பெற்று பந்தல் அமைக்கும் பணிகளை முன்னெடுக்குமாறும் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பந்தல் அகற்றப்பட்டுள்ளதுடன், கொடிகளை கட்டி ஏனைய சிரமதானப் பணிகளை முன்னெடுக்கும் நடவடிக்கையில் ஏற்பாட்டுக் குழு ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு செல்லும் உள்ளக வீதிகள் மற்றும் நினைவேந்தல் வளாகத்துக்கு அண்மையான பகுதிகளில் பொலிஸார், இராணுவம், புலனாய்வாளர்கள் நிறுத்தப்பட்டு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு நினைவேந்தலுக்கான ஏற்பாடுகளை மக்கள் செய்து கொண்டிருந்த வேளை நினைவேந்தல் வளாகத்தைச் சுற்றி இராணுவ வாகனங்கள் அங்குமிங்கும் சுற்றித் திரிந்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## பொம்மை...

இணைந்து கொள்ளப் போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

ஊழல் மற்றும் பிணைமுறி மோசடியில் ஈடுபட்டவர்களை ஆட்சேர்ப்பு செய்த கைப்பாவை அரசாங்கத்துடன் தேசிய மக்கள் சக்தி தன்னை ஈடுபடுத்தாது என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அரசாங்கம் அமைக்கப்பட்ட போதிலும் ஆளும் தரப்பு இன்னும் அமைச்சரவை அமைச்சர்களைத் தேடிக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

“சில ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அமைச்சுக்களை ஏற்றுக் கொள்வதாகக் கூறியுள்ளனர். அவர்கள் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்கிறார்கள். ஒரு அரசியல் கட்சி என்ற வகையில் இதை நாம் தெளிவுபடுத்த வேண்டும். இந்த பொம்மை அரசுக்கு மக்கள் ஆணை இல்லை. நாங்கள் அதில் ஒரு பகுதியாக இருக்க மாட்டோம்” என்று அவர் மேலும் கூறினார். (ம)

## ஸ்ரீலங்கன்...

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கன் விமான சேவையை தனியார் மயப்படுத்துமாறு நான் முன்மொழிகின்றேன் .

2020 - 2021 ல் மட்டும் ஸ்ரீலங்கன் விமான சேவை 45 பில்லியன் ரூபாய்கள் நட்டமடைந்துள்ளது.

2021 மார்ச் 31 ஆகும்போது இதன் மொத்த நட்டம் 372 பில்லியன்களாக இருந்தது.

நாம் இதனை தனியார் மயப்படுத்தினாலும் இந்த நட்டத்தை நாமே ஏற்க நேரிடும். இந்த நட்டத்தை வாழ்க்கையில் ஒருமுறையாவது விமானத்தில் பயணிக்காத இந்த நாட்டின் ஏழை எளிய மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றார். (ம)

## மோசமான...

நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையின்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், “கடந்த வியாழக்கிழமை நான் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றேன். அந்தப் பதவியை நான் கேட்கவில்லை. நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை கருத்தில்கொண்டு இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. 2022 ஆரம்பத்தில் கடந்த அரசாங்கத்தின் வரவு-செலவு திட்டத்தில் 2.3 ட்ரில்லியன் ரூபாய்கள் வருமானமாக உள்ளன என காட்டப்பட்டாலும் இந்த வருடத்திற்கான உண்மையான வருமான எதிர்வுகூறல் 1.6 ட்ரில்லியன் ரூபாய்களாகவே உள்ளன.

2022ஆம் ஆண்டிற்கான அரசின் செலவு 3.3 ட்ரில்லியன் ரூபாய்கள். எவ்வாறாயினும் கடந்த அரசில் வட்டி விகிதம் அதிகரித்தமை மற்றும் மேலதிக செலவுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான அரசின் மொத்தச் செலவு 4 ட்ரில்லியன் ரூபாய்களாகும். வருடத்திற்கான வரவுசெலவு பற்றாக்குறை 2.4 ட்ரில்லியன் ரூபாய்களாக உள்ள அதேவேளை அது சராசரி தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 13 வீதமாகும்.

2019 நவம்பர் மாதத்தில் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தன.

ஆனால் இன்று திறைசேரியால் ஒரு மில்லியன் டொலர்களைக்கூட தேடிக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிவாயுவை கப்பலில் ஏற்றும் பொருட்டு செலுத்தத் தேவையான 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைக்கூட இந்த நேரத்தில் நிதியமைச்சினால் தேடிக் கொடுக்க முடியாதுள்ளது.

இப்போது நமது கையிருப்பில் ஒரு நாளைக்குத் தேவையான பெற்றோல் மட்டுமே உள்ளது.

நேற்று முன்தினம் வந்த டீசல் கப்பலால் இன்றில் இருந்து உங்களின் டீசல் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும்.

மண்ணெண்ணெய் சம்பந்தமான நிலைமை இதனை விடப் பயங்கரமானது.

இந்தநேரம் வரை இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகள், தனியார் வங்கிகள், இலங்கையில் உள்ள வெளிநாட்டு வங்கிகள் அனைத்தும் டொலர் இல்லாத சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளன. நம்மிடம் கையிருப்பில் உள்ள டொலர்களின் அளவு மிகவும் சிறியது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆனால் இவ்வனைத்து சிரமங்களுக்கு மத்தியில் நேற்று முன்தினம் ஒரு டீசல் ஏற்றிய கப்பலை கொண்டு வந்தோம். அதனால் அந்த டீசலை உங் களால் பெற்றுக் கொள்ள முடியும். அதன் பொருட்டு இந்தியாவின் ஒத்துழைப்பு நமக்கு கிடைத்தது.

அரசாங்கம் தற்போது 92 வகை பெற்றோல் லீட்டர் ஒன்றில் ரூ.84.38, 95 வகை பெற்றோல் லீட்டர் ஒன்றில் ரூ.71.19, டீசல் லீட்டர் ஒன்றில் ரூ.131.55, சுப்பர் டீசல் லீட்டர் ஒன்றில் ரூ. 136.31 மற்றும் மண்ணெண்ணெய் லீட்டர் ஒன்றில் ரூ. 294.50 என நட்டமடைகின்றது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இந்த நட்டத்தை மேலும் தாங்கிக் கொள்ள முடியாது. அதேபோல இலங்கை மின்சார சபை மின் அலகு ஒன்றிற்காக உங்களிடம் ரூ. 17ஐ அறவிட்டாலும் அதன் பொருட்டு 48 ரூபாய்கள் வரை செலவு செய்கிறது. அதன்படி ஒரு அலகிற்கு 30 ரூபாய்கள் நட்டம் ஏற்படுகிறது. அதுவும் மோசமான சிக்கலாகும்.

எவ்வாறாயினும் எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலகட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம்கொடுக்க வேண்டும்.

நான் மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்தவகையிலும் விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும் அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மையான நிலைமை. குறுகிய காலத்திற்கு நாம் கடந்த காலத்தை விட மிகவும் கஷ்டமான காலத்திற்கு முகம் கொடுக்கப் போகின்றோம் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இழப்பீட்டிற்கு உத்தரவிட்ட அரசாங்கம்

# சிங்கள மக்களுக்கு ஒரு நியாயம் தமிழ் மக்களுக்கு இன்னொரு நியாயமா?

### சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி



(யாழ்ப்பாணம்)

**இலங்கை ஒரு பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு என்பதையும், பல மொழி, பல கலாசாரங்களையும் பண்பாடுகளையும் பின்பற்றுகின்ற மக்கள் இங்கு வாழ்கின்றனர் என்பதையும், அவர்களது உரிமைகள் மதிக்கப்பட்டு அனைவருக்கும் சமநீதி வழங்கப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்ளாதவரை இந்த நாட்டில் பொருளாதார எழுச்சியும் வராது. இந்த நாட்டிற்கு விமோசனமும் ஏற்படாது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

அண்மையில் காலிமுகத் திடலில் அமைதி வழியில் போராடிக்கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திய குண்டர் கூட்டத்திற்கு எதிராக போராட்டக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட பதில் தாக்குதல் தொடர்பான மதிப்பீடுகளையும் நிவாரணங்களையும் அரசாங்கம் உடனடியாக அறிவித்துள்ள நிலையில், இதுகாலம்வரை தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு உரிய மதிப்பீடுகளோ, விசாரணைகளோ, நிவாரணங்களோ வழங்கப்பட்டதா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இது குறித்து நேற்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையில் 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரசகரும மொழி சட்டம் கொண்டு வரப்பட்டபொழுது அதனைத் தமிழர்கள் எதிர்த்தனர். இதற்கு எதிர்வினையாக இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் நூற்றுக்கணக்கான கோடி ரூபா சொத்துக்களை அழித்ததுடன் பலநூறு தமிழர்களையும் கொன்று குவித்தது.

1977 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன தமிழ் மக்கள் மீது வன்முறையை ஏவிவிட்டார். இதன்போதும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா சொத்துக்கள் அழிக்கப்பட்டதுடன், ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், பல்லாயிரக்கணக்கான தென்பகுதி வாழ் தமிழர்கள் தமது தாயகமான வடக்கு-கிழக்கிற்கு விரட்டியடிக்கப்பட்டனர்.

மீண்டும் 1983 ஆம் ஆண்டும் தமிழர்கள்மீது அரச அனுசரணையுடன் பாரிய ஒரு வன்முறைத்தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், திட்டமிட்ட வகையில் அவர்களது வீடுகளும் வியாபார நிறுவனங்களும் கொள்ளையிடப்பட்டு தீமூட்டப்பட்டன.

2009 இல் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதுடன், முள்ளிவாய்க்காலில் விவசாயிகளின் நூற்றுக்கணக்கான உழவு இயந்திரங்கள், கனரக வாகனங்கள், இயந்திரங்கள், மகிழுந்துகள், உந்துருளிகள், துவிச்சக்கர வண்டிகள் என்பன கைவிடப்பட்டு மக்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் மீண்டு வந்தபொழுது அவர்களுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் உடமைகள் எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

வடக்கு-கிழக்கில் யுத்தத்தின் பின்னர் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டிருந்த பல்லாயிரம் கோடி பெறுமதியான தங்கமும் வைப்பிலிடப்பட்டிருந்த பல்லாயிரம்கோடி பணமும் அரசாங்கத்தினால் கபளீகரம் செய்யப்பட்டது. இவை தொடர்பாக அன்றிலிருந்து இன்றுவரை எந்தவிதமான விசாரணைகளோ நிவாரணங்களோ எமது மக்களுக்குக் கிடைக்கவில்லை.

அரசாங்கத்தின் தமிழ் மக்கள் விரோத தவறான அணுகுமுறை மற்றும் பொருளாதாரக் கொள்கை காரணமாக நாடு பொருளாதார ரீதியில் கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது. பொருளாதார வீழ்ச்சியினால் கொதித்தெழுந்த தென்பகுதி சிங்கள மக்களை அடக்குவதற்காக, அரசாங்கம் தமது கட்சிக் குண்டர்களை அமைதியாகப் போராடிக்கொண்டிருந்தவர்கள் மீது ஏவிவிட்டு வன்முறையைத் தூண்டியது.

இதன் காரணமாக ஏற்பட்ட கலவரத்தில், ஆளும் கட்சியினரின் பல வீடுகள் எரியூட்டப்பட்டதுடன், அவர்களது அலுவலங்களும் வாகனங்களும் தீயிடப்பட்டன. மக்களின் போராட்டத்தைக் குழப்புவதற் காக குண்டர் கூட்டத்தை அழைத்து வந்த 48 பேரு ந்துகள் பொது மக்களால் அடித்து நொறுக்கப்பட்டு எரியூட்டப்பட்டது.

இந்தக் கலவரத்தின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்காக அரசாங்கத்தின் பல்வேறுபட்ட புலனாய்வுப் பிரிவுகளும் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றன. இதில் சொத்துக்களை இழந்த பலர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் என்ற வகையிலும் மேலும் பெரும்பான்மை சிங்கள தேசிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற வகையிலும் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் துரிதகதியிலான ஏற்பாடுகளைச் செய்ய முன் வந்திருக்கிறது.

மேற்கண்டவற்றிலிருந்து இலங்கை அரசாங்கம் சிங்கள மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் நலன்களில் காட்டுகின்ற அக்கறையை தமிழ் மக்கள் மீது காட்டுவதில்லை என்பதும், இவ்வளவு அழிவுகளுக்குப் பின்னரும், நாடு இன்று எதிர்நோக்கியிருக்கின்ற பொருளாதார வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் தமிழர்விரோத செயற்பாடே காரணம் என்று தெரிந்த பின்னரும், இலங்கை அரசாங்கம் இன்னமும் தமிழர் விரோத செயற்பாட்டையே உயர்த்திப் பிடிக்கின்றது அத்துடன் தமிழ்த் தேசிய இனத்தை தனது கால்களின் கீழ் அடிமைகளாக வைத்திருப்பதையே விரும்புகிறது என்பதும் தெளிவாகின்றது. (நி-6)

# பிரபாகரனின் இல்லத்தில் இருந்து முள்ளிவாய்க்கால் பேரணி ஆரம்பம்







(கரணவாய்)

இன விடுதலையை நோக்கி முள்ளிவாய்க்காலுக்கான நடைபவனி நேற்று திங்கட்கிழமை முற்பகல் வல்வெட்டித்துறையில் இருந்து ஆரம்பமாகியது.

அதற்கு முன்னதாக வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து வல்வெட்டித்துறையில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வீட்டிற்கு முன்பாக இருந்து நடைபவனி ஆரம்பமானது.

நடை பவனியில் கலந்து கொண்டவர்கள் இன அழிப்பிற்கான சர்வதேச நீதி வேண்டும் என பதாகைகளை தாங்கி சென்றனர். (நி-18-33-60)

## ரணில் அரசாங்கத்திற்கு சுயாதீன எம்.பிக்களும் ஆதரவு

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எந்தவொரு அமைச்சுக்களையும் ஏற்காமல் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாக அரசாங்கத்தில் இருந்து விலகிய 10 கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சுயாதீன எம்.பிக்கள் குழு தீர்மானித்துள்ளது.

பிரதமருடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விரைவில் இடைக்கால வரவு-செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த சந்திப்பின் போது தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
01 – 07 – 1933

மறைவு
12 – 05 – 2022

## திருமதி துரைராஜா கனகம்மா

யாழ்ப்பாணம் கோண்டாவில் வடக்கு, கோகுல வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராஜா கனகம்மா அவர்கள் கடந்த 12.05.2022 (வியாழக்கிழமை) அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற துரைராஜா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தருமலிங்கம், குமாரசாமி, பொன்னம்பலம், தங்கச்சியம்மா, பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜசுலோசனா, யோகரஞ்சனா, மதனகுமார், கரிகரன், தேவகுமார், யசோனா, சூரியகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் நவரத்தினம், தருமானந்தன், பவளராணி, சிவரோகினி, ரஞ்சினி, பகிரதி, அனுசினி ஆகியோரின் அன்பு மாமியாரும் நவிதராஜ், ரவிராஜ், யாழினி, மகிழேந்தினி, லோகசீலன், காலஞ்சென்ற ரஞ்சிததயாளன், றமணன், சங்கரி, பவதாரணி, தர்சிகன், அயினா, சுமிதன், யசிந்தா, சுஜீவன், சுகிர்தன், திவ்வியா, தேனுஜா, அஷ்வியா, றக்ஸ்சியா, கார்த்திகன், கதிர்ஷன், கபிதன், கஜிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கஜனன், பிரவின், மரீனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.05.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் கலைவாணி மக்கள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (11404)

தகவல் :-
குடும்பத்தினர் (மதனகுமார்)
077 996 5453

# ராஜஸ்தான் வெற்றி



ஐ.பி.எல். இருபது -20 தொடரின் 63 ஆவது லீக் போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

மும்பையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 178 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜெய்ஸ்வால் 41 ஓட்டங்களையும் படிக்கல் 39 ஓட்டங்களையும்பெற்றுக்கொண்டனர். லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியின் பந்துவீச்சில், ரவி பிஷ்னோய் 2 விக்கெட்டுக்களையும் அவிஷ்கான், ஹோல்டர் மற்றும் அயுஸ் பதோனி ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர். இதனைத் தொடர்ந்து 179 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 158 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, தீபக் ஹூடா 59 ஓட்டங்களையும் மார்க்கஸ் ஸ்டொயினிஸ் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், ட்ரெண்ட் போல்ட், பிரசீத் கிருஸ்ணா, ஒபெட் மெக் கோய் ஆகியோர் தலா 2 விக் கெட் டுகளையும் யுஸ்வேந்திர சஹால் மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், 2 விக்கெட்டுகளை வீழ்த்திய ட்ரெண்ட் போல்ட் தெரிவு செய்யப்பட்டார். (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2617

### ஜெயராணி

அம்மாவின் சமையலில் குறை இருப்பினும் காட்டிக் கொள்ளாதே...



ஏனெனில் சிலருக்கு அம்மா இல்லை, பலருக்கு உணவே இல்லை!

### தசீதா

என்னடா எப்போ பார்த்தாலும் 24 மணி நேரமும் இந்த FB லயே சுத்திட்டு இருக்கா?




ஒரு 4 வருசம் முன்னாடி இந்த FB ங்கறது எப்டி இருக்கும்ன்னு பாத்துட்டு போலாம்னு உள்ள வந்தேன் இப்போ இதுல இருந்து எப்பிடி வெளிய போறதுன்னு தெரியாம மாட்டிக்கிட்டு முழிக்கிறேன்ய்யா...

### நிதுஷா



மாப்பிள்ளை வீட்டார்- பொண்ணு புடிச்சிருந்தா தான் சாப்பிடுவோம்.
பெண் வீட்டார்- பொண்ணு புடிச்சிருக்குன்னு சொன்னாத்தான் சமையலே ஆரம்பிப்போம்...

### பக்தவக்ஷலன்

பேஸ்புக்,வட்சப் வர்றதுக்கு முன்னாடியே குரூப் ஃசேட்டிங்க கண்டுபிடிச்சவங்க நம்ம ஆளுங்க...



### ஜலோஜ்

சின்ன வயசுல மிஸ்ஸ்க்கு பயப்படுறதும்...



பெரிய வயசுல மிஸ்ஸஸ்க்கு பயப்படுறதும் ஆண்களின் சாபம்...

### றியாஸ்

வெயிலுக்கு சுகமா குச்சி ஐஸ் சாப்பிடலாம்னு அப்பாக்கிட்ட 5 ரூபா தான் டா கேட்டேன்...




பாவம் மனுஷன் என்ன கோவத்துல இருந்தாரோ பொசுக்குனு பெல்ட்ட உருவிட்டாரு... எடுத்தேன்பாரு ஓட்டம் நிக்கவேயில்லையே.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 96 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

## 17.05.2022




# செல்லக்குட்டி இரத்தினம்

இன்னல்கள் நிறைந்த வாழ்வு தனிலே...!
துன்பங்கள் யாவையும் தவிடு பொடியாக்கி...!
அன்பிற்கோர் அரசியாய்...!
பண்பிற்கோர் புகலிடமாய்...!
வீரத்தின் விழை நிலமாய்...!
உழைப்பிலே உத்தமியாய்...!
பேச்சினிலே வாய்ஜாலக் கில்லாடியாய்...!
எங்கள் வம்சத்தின் குலவிளக்காய்...!
தன் வாழ்வினையே
எங்கள் குடும்ப விருட்சத்தின்
விடியலுக்காய் அர்ப்பணித்து...!
சந்ததிகள் நான்கு கண்டு எமதூரின்
சரித்திரத்திலே இடம் கொண்டு
வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள்
குடும்பத்தின் சரித்திர மங்கை
செல்லக்குட்டி இரத்தினம்
அவர்கட்கு 96 ஆவது
அகவை தின வாழ்த்துக்கள்...

வாழ்த்துவோர்:-

**பிள்ளைகள்:-** ஜெ.லீலாவதி, செ.கணேசன், இ.பிறேமாவதி(கனடா)
**மருமக்கள்:-** ம.ஜெயக்கொடி, க.மலர்ச்செல்வி, த.இராசரத்தினம்(கனடா)
**பேரப்பிள்ளைகள்:-** ஜெயக்காந்தன் கஸ்தூரி, காண்டீபன்-பிரபாஜினி(சுவிஸ்)
வித்யா- நிவேதனன்(சுவிஸ்), சுகன்யா-றுபேஷ், சிந்துயா-மயூரதன், க.மயூரி,
க.மதுசன்,இ.சுமேதா(கனடா)
**பூட்டப்பிள்ளைகள்:-**
நிவே ஆதவன்(சுவிஸ்), நிவே இலக்கியா (சுவிஸ்),ஜெ.திருமாறன், ஜெ.லக்சிகன்,
ஜெ.தர்ணி, று.ஹரிஷ்னி, று.ஹனுஷ்றி

'செல்வதாரகை'
மனோகரா
அல்வாய்

(11397)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 12 பேர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரின் அதிரடி நடவடிக்கை காரணமாக இவ்வருடம் இதுவரை 12கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் 3ஹெரோயின் கடத்தல்,3கஞ்சா கடத்தல் நடவடிக்கைகள், 5கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள்,அரச சாராய விற்பனை ஆகிய சட்டவிரோதச் செயற்பாடுகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

குறித்த குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை நீதிமன்றில் முற்படுத்தியதில் இரண்டு இலட்சம் ரூபாய் தண்டமும் அறவிடப்பட்டுள்ளது.

உதவி மதுவரி ஆணையாளர் ரொஷான் பெரேராவின் வழிநடத்தலில், சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி ஆ.ராஜ்மோகன் தலைமையிலான குழுவினர் குறித்த கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)



யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த்திருவிழா நேற்றுக்காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1950 ❖ 12 ❖ 19



மறைவு 2021 ❖ 05 ❖ 28

அமரர். **ஆறுமுகம் யோகராசா**

ஓய்வு பெற்ற முகாமையாளர், கிராமிய கூட்டுறவு வங்கி கொடிகாமம்
தலைவர், எருவன் பிள்ளையார் ஆலயம்

நெஞ்சம் மறவாது நினைவுகள் நீங்காது
வஞ்சனை கிடையாது அஞ்சாத நெஞ்சத்தாலும்
சொல்லாலும் செயலாலும் தூய்மையாய் வாழ்ந்து
எல்லோருக்கும் நல்வழி காட்டிய எம் அப்பா
எங்கள் வாழ்வு வளம் காண
மங்காத ஒளி விளக்காய்
உடல் பொருள் உயிரென
அனைத்துமீந்து எமைக் காத்தீர்
அன்புள்ளம் கொண்ட துணைவராக
ஆற்றல் மிகுந்த தந்தையாக
அறிவூட்டும் ஆசானைப் போன்று
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த
எங்கள் அன்பு அப்பாவின் ஆத்மா
இறையடியில் இன்புற்றிருக்கவேண்டுகிறோம்.

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

(11400)

குடும்பத்தினர்
077 087 3679


# நெல்லியடி நகர்ப்பகுதியில் சமிக்ஞை விளக்கு பழுது

(கரணவாய்)

நெல்லியடி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள வீதி கட்டுப்பாட்டு சமிக்ஞை விளக்கு கடந்த சில தினங்களாக இயங்கவில்லை. இதனால் அப்பகுதியில் சன நெரிசல் அதிகளவு ஏற்படுவதுடன் வீதி விபத்தும் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.



எனவே அதிகாரிகள் குறித்த சமிக்ஞை விளக்கை சீர் செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-6-60)


# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
**திரு. த.சுரேன்**
அவர்களின் தந்தையார்
திரு.
**இராசையா தயாபரன்**
அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுவதுடன் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொண்டு ஆழ்ந்த இரங்கலை கல்லூரிச் சமூகம் தெரிவித்துக் கொள்கிறது.

ஆசிரியர் கழகம்
(11399) யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.


## வருடாந்த பொது கூட்டம்

(குருநகர்)

பகிரங்க சேவைகள் ஓய்வூதியம் நம்பிக்கை நிதியம் யாழ்.பிரதேச பிரிவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்-2022 நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு லிகோ கிளெமென்ற் ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6-106)

# இராசிபலன்

17.05.2022
வைகாசி 03, செவ்வாய்க்கிழமை
பிரதமை முற்பகல் 8.12 மணிவரை

துதியை பின்னிரவு 5.52 மணிவரை
அனுசம் பிற்பகல் 12.40 மணிவரை
சுபநேரம் 10.23-11.53 மணிவரை

இராகுகாலம் 2.53-4.23 மணிவரை
சந்திராஷ்டமம்- பரணி

**வளவன்**

**மேஷம்:** வீண் விவாதங்களைத் தவிர்த்துக் கொள்வது நல்லது, கவலைகள் தீர சுந்தனை வழிபட வேண்டிய நாள், தேக நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்:** மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவினர் பகை மாறும்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கிடைக்கும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்:** பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், இலாபகரமான நாள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**ரிஷபம்:** குடும்பதில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுபவிரயங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் பகை அகலும், போசன சுகமுண்டு, சுப காரியப் பேச்சில் முன்னேற்றம் உண்டு.

**கும்பம்:** அருமையான நாள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள்.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** தொழில் போட்டிகளை முறியடித்து முன்னேற்றம் காண்பீர்கள், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உடல் நலனில் சிறுசிறு இடையூறுகள் ஏற்படலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறலாம்.

**மீனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கடுமையான எதிர்ப்புகள் கூட சாதகமாகிவிடலாம்.

நாம் இழந்து விட்ட சொர்க்கங்களே உண்மையான சொர்க்கங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## — உலக சந்தையில் —
# கோதுமை விலை சடுதியாக அதிகரிப்பு

(வோஷிங்டன்)

**கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதிக்க இந்தியா முடிவு செய்துள்ளதால் உலக சந்தையில் கோதுமை விலை கடுமையாக உயர்ந்துள்ளது.**

இந்தியாவில் இருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படும் கோதுமையின் அளவு கடந்த 2 மாதங்களாக அதிகரித்ததால் இந்தியாவில் கோதுமை விலை நாளுக்கு நாள் அதிக ரித்துள்ளது.

இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் கோதுமை ஏற்றும திக்கு இந்திய மத்திய அரசு தடை விதித்துள்ளமை குறிப்பிட த்தக்கது. ( நி-6)

# நீர் மின் உற்பத்தி 60 சதவீதமாக அதிகரிப்பு

(கொழும்பு)

கனமழையால் நீர் மின் உற்பத்தி தற்போது தினசரி மின் உற்பத்தியில் 60 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று தகவல் கள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக நாட்டில் நிலவிய வறண்ட வானிலை காரணமாக நீர் மின் உற்பத்தி 18% ஆகக் குறைந்திருந்தது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், ஐந்து மாகாணங்களில் தற்போது கன மழை பெய்து வருகிறது.

மழை காரணமாக மவுஸ் ஸாக்கலை, காசல்ரீ, லக்சபான மற்றும் சமனலவெவ நீர்த் தேக்கங்களிலும் மத்திய மலை யக விக்டோரியா, ரந்தெனிகல மற்றும் கொத்மலை நீர்த்தேக்க ங்களிலும் நீர் மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது.

இதனால் நீர் மின் உற்பத்தி தற் போது தினசரி மின் உற்பத்தியில் 60 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கடும் மழை காரணமாக களுகங்கை, ஜின் கங்கை மற்றும் குடா கங்கை ஆகிய ஆறுகளின் கரையோர ங்களில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறு நீர்ப் பாசன திணைக்களம் எச்சரித்து ள்ளது. (நி-6)

# பாதுகாப்பு செயலாளரும் குண்டர்களுக்கு உடந்தை
## விஜித ஹேரத்



(கொழும்பு)

அலரிமாளிகையில் இருந்து கொழும்பு கோட்டா கோ கம விற்கு வந்த குண்டர்களை தடுக்க வேண்டாமென பாதுகா ப்பு செயலாளரே பணிப்புரை விடுத்ததாக தேசிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப்பி னர் விஜித ஹேரத் தெரிவித தார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பதவியில் இருக்கும்போதே, சம்பவம் தொட ர்பாக விசாரணை நடத்துவதில் அர்த்தமில்லை எனவும், அவரை பதவி நீக்கம் செய்து விசாரணை நடத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள் ளார்.

இந்த தாக்குதலுக்கு மூளை யாக செயற்பட்டவர் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எனவும் அவர் தெரிவித்தார்.

கோட்டா கோ கமவை தாக் கியவர்களை கைது. செய்யும் நோக்கில் அடுத்தடுத்த சம்பவ ங்களுடன் தொடர்புடையவர் கள் கைது செய்யப்பட்டு வருவ தாகவும் அவர் மேலும் குறிப் பிட்டார். (நி-6)

# இந்து பத்திரிகை செய்தி
## இனக்கலவரத்திற்கான அத்திபாரமா?
## அருட்தந்தை சக்திவேல் கேள்வி

(நெளுக்குளம்)

அரசியல் கைதிகள் தாம் எப்போது விடுதலை அடைவோம் என ஏங்கித் தவிக்கும் நிலையில் மீண்டும் வட கிழக்கின் இளைஞர்களால் சிறை களை நிரப்பும் நிலையும் ஏற்பட லாம்.

அத்தோடு சிறைக்குள்ளேயே வன்முறையும் வெடிக்கலாம் என அரசியல் கைதிகளை விடுதலை செய் வதற்கான தேசிய அமைப்பின் இணை ப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரி வித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

த ஹிந்து பத்திரிகையின் "மே பதினெட்டில் முன்னாள் விடுதலைப் புலி போராளிகள் தாக்குதல் நடத்த உள்ளார்கள்" என்பது அரசியல் சதி மட்டுமல்ல, வட கிழக்கில் இராணுவ கட்டமைப்பை மேலும் பலப்படு த்தவும் அப்பாவி இளைஞர்களை சிறைக்குள் தள்ளவும் வழிவகுக் கும்.

மறைந்திருக்கும் மகிந்த ராஜ பக்ஷ வெளியே வருவதற்கும், காலி முகத்திடலின் "கோட்டா கோ ஹோம்", அலரிமாளிகையின் முன்னால் நடக்கும் "நோ டீல் கம" போராட்ட ங்கள் நீர்த்துப் போகச் செய்வதற்கான சூழ்ச்சியாகவே கொள்ள வேண் டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ காலிமுகத்திடல் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்காக எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி கண்ட நிலையில் அரச பயங்கர வாதத்தின் துணையோடு வன் முறையை கட்டவிழ்த்து விட்ட நிலை யில் அதுவும் தோல்வியில் முடியவே தற்போது பாதுகாப்புக் கருதி தமிழர் பகுதியிலேயே மறைந்து வாழும் நிலையில் அந்த வெட்கத்தில் இரு ந்து மீள்வதற்கு இந்து பத்திரிகை செய்தி துணையாக உள்ளது.

2019 முதல்தொடர்ந்து பல்வேறு வகை யில் முள்ளிவாய்க்கால் நினைவேந் தலை தடுக்க முயற்சி செய்தவர்கள் தற்போதைய சூழ்நிலையில் இந்து பத்திரிகையின் ஊடாக புலி புரளியை கிளப்பி அடுத்த இனக்கலவரத்திற்கு தூண்டி விடுகிறார்களோ எனவும் சிந்திக்கத் தோன்றுகின்றது.

2009 தொடர்ந்து ஆயுதம் மௌனிக் கப்பட்ட நிலையில் சாத்வீக போராட்ட த்தை முன்னெடுத்துக் கொண்டிருக் கும் வடகிழக்கு மக்கள் சர்வதேச ரீதியில் நீதியின் கதவை தட்டிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் தாயக பிரதேசத்தில் உள்ள புல்லு ருவிககளை அடையாளங்கண்டு அவதானமாக செயற்பட வேண்டிய காலமிது.

இது மே 18 நினைவேந்தலுக்கு பின்னரும் தூர நோக்கோடு பய ணிக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றது என அவர் தெரி வித்தார். (4-6-299)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 22 சூரி 2 செவ் 10 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L Executive Operations<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் நிரந்தர தொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12666 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: சூரி 9 செவ் 12 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்:BSc (M.L.Science) - Jaffna அரச-மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/9588 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம் : திருவோணம் 3<br>கி.பா:99 சூரி 7 செவ் 8 இல்<br>உயரம்:161 cm<br>தகைமை/தொழில்:Private sales Representative (computer)<br>எதிர்பார்ப்பு: தொழிலுள்ள பெண்<br>தொ.இ: B/12668 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 45 சூரி 8 செவ் 6 இல்<br>உயரம்:155 cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/9589 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: சூரி.செவ் 7 இல்<br>உயரம்:179 cm<br>தகைமை/தொழில்: A/L (கனடா)<br>எதிர்பார்ப்பு: கனடா மட்டும்<br>தொ.இ: B/12669 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 47 சூரி 12 செவ் 11 இல்<br>உயரம் : 4' 10"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/9629 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: மிருக சீரிடம் 4<br>கி.பா:52 சூரி 1 செவ் 7 இல்<br>உயரம்: 5' 1'<br>தகைமை/தொழில்:A/L சாரதி<br>எதிர்பார்ப்பு: சாதாரணபடித்தபெண் வெளிநாடு<br>தொ.இ: B/12670 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 46 சூரி 12 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/9634 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 47

### பொறுமையின் பலன்



ஒரு நாள் ஹோட்டல் ஒன்றிற்கு உணவருந்துவதற்காகச் சென்றேன். விலைப் பட்டியலை படித்து விட்டு உணவுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு மேசையில் இருந்தேன். சுமார் 20 நிமிடங்கள் கழித்து, ஆண்களும் பெண்களுமாக 10 பேர் நான் அமர்ந்திருந்த மேசையின் அருகே அமர்ந்தனர். தேவையான உணவுக்கு ஆர்டர் கொடுத்தார்கள். சிறிது நேரத்திலேயே உணவு வந்ததும் கூச்சலும் கும்மாளமுமாக உணவு உண்டார்கள். எனக்கு இன் னும் உணவு வராததை கவனித்த ஒருவர் அதை கிண்டலாக சொன்னார். தன்னை அந்த ஹோட்டலில் எல்லோருக்கும் தெரியும். அதனால் தான் விரைவாக கிடைத்தது. பிச்சை எடுப்பது போல் காத்திருக்க தேவையில்லை என்றார். என்னால் பொறுக்க முடியவில்லை. ஆர்டரை ரத்து செய்து விட்டு புறப்படலாம் என்று வெயிட்டரை கூப்பிட்டேன்.

வெயிட்டர் அமைதியாக என்னிடம் கூறினார். சார் உங்களுடைய ஆர்டர் எங்களுக்கு மிகவும் ஸ்பெஷல். அதை எங்கள் தலைமை செஃப் அவரே தயாரித்து கொண்டிருக்கிறார்.

அவர்களுக்குத் தரப்பட்ட உணவு அவசரமாக, இங்கே பயிலும் மாணவர்களால் தயா ரிக்கப்பட்டது. எனவே உங்கள் உணவை எங்கள் தலைமை சமையல்காரர் தயாரித்து கொண்டிருக்கிறார் என்றார்.

சிறிது நேரத்தில் எனக்கான உணவு வந்தது. அதை 6 வெயிட்டர்ஸ் எனக்கு பரிமாறி னார்கள். அதில் மிகவும் சுவையான உணவு வகைகள் நான் ஆர்டர் கொடுக்காததும் இருந்தது எனக்கு ஒன்றும் புரியவில்லை.

நான் ஹோட்டலில் நுழைந்த போதே அந்த ஹோட்டலின் முதலாளி என்னை பார்த்து விட்டார். அவர் என் பள்ளி நண்பர். அவர் என்னை ஆச்சரியப்படுத்த விரும்பினார். எனது எளிய உணவை பணக்கார உணவாக மாற்றி, எனக்கு ராயல் ட்ரீட் கொடுக்குமாறு சமையலறைக்கு அறிவுறுத்தினார். பக்கத்து மேசையில் இருந்தவர்கள் வாயடைத்து போய் விட்டார்கள். அவர்களால் பேசவே முடியவில்லை தங்களுக்கு ஏன் அத்தகைய சேவை கிடைக்கவில்லை? என்று தங்களுக்குள் வருத்தமாகப் பேசிக் கொண்டார்கள்.

சிலர் நம்மை பார்த்து நகைப்பார்கள். தாங்கள் சிறப்பானவர்கள் என்று குத்தி காட்டுவார்கள். கடவுள் தனக்கு செல்வமும் மகிழ்ச்சியும் கொடுத்திருக்கிறார் என்று நமது இயலாமையை சுட்டிகாட்டுவார்கள்.

உங்களுக்கு கூட வருத்தமாக இருக்கலாம். இவ்வளவு நாட்களாக உழைத்தும், பொறுமையாக இருந்ததற்கும் இன்னும் திருப்புமுனை வரவில்லையே.

அந்த மன உளைச்சலால், ஏன் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது என்று அபத்தமான எண்ணங்கள் கூட வரலாம்...

கவலை கொள்ளாதீர்கள்...

கடவுள் உங்களுக்கு நல்ல ஒரு உணவு தர வேண்டும் என்று உங்களை காக்க வைத்திருக்கலாம். அதைத் தயார் செய்ய சிறிது நேரம் ஆகும். அதை தலைமை சமையல்காரர் கடவுளால் மட்டுமே தயாரிக்க முடியும்.

பொறுமையாக நம் கடமைகளை சரி வர செய்து நாம் காத்திருந்துதான் ஆக வேண்டும்.

அந்த உணவு வரும் போது நம்மை கேலி செய்தவர்கள் வாயடைத்துப் போய் விடுவார்கள். ஆசீர்வதிக்கப்பட்ட உங்கள் நாளை அப்போது அனுபவிக்கவும்.

நமக்கு வர வேண்டியது நமக்கு வந்தே தீரும். யாராலும் தடுக்க முடியாது....

**அன்பு வாசகர்களே!**

**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

# நேட்டோவில்

## சுவீடன், பின்லாந்து

(பெர்லின்)

**உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெ வரலாற்று மாற்றத்தில் நேட்டோ உறுப்புரி மற்றும் பின்லாந்து உறுதிப்படுத்தியுள்ள**

சுவீடனில், ஆளும் சமூக ஜனநாயகக் கட்சியினர் மேற்கத்தேய பாதுகாப்புக் கூட்டணியில் சேர்வதை ஆதரிப்பதாகக் கூறியதால், இது நாடு விண்ணப்பிக்க வழி வகுத்தது.

பின்லாந்தும் நேட்டோவில் சேர்வதை அதிகார பூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வந்தது.

சுவீடன் இரண்டாம் உலகப் போரில் நடுநிலை வகித்தது மற்றும் இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக இராணுவக் கூட்டணிகளில் சேருவதைத் தவிர்த்தது.

பின்லாந்து ரஷ்யாவுடன் 1,300கி.மீ (810மைல்) எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. இப்போது வரை, அது

## ரஷ்யப் படைகளின் கடைசிக் காலம் ஆரம்பம்

### உக்ரைன் ஜனாதிபதி எச்சரிக்கை



(கீவ்)

உக்ரைனில் ஆக்கிரமிப்புப் போரை நடத்தி வரும் ரஷ்யா 82 வது நாளாகவும் தொடர் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு செய்தி வெளியிட்ட உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி கடந்த நாட்களில் தாக்குதல் வேகத்தை குறைத்திருந்த ரஷ்யா தற்போது மீண்டும் பலத்த தாக்குதலை மக்கள் வாழும் சமூகங்களை இலக்கு வைத்து நடத்தி வருகின்றது.

உக்ரைனிய பிராந்தியங்களுக்குள் நுழைய எத்தனிக்கும் ரஷ்யப் படைகளின் கடைசிக் காலமும் இதுவாகத் தான் இனி இருக்கும் என அவர் தெரிவித்தார். (நி-6)

## புடினுக்கு

### பிரிட்டன் உள



(லண்டன்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடி மிர் புடினுக்கு உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ள தாக முன்னாள் பிரிட்டன் உளவாளி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்டோபர் ஸ்டீலி என்ற நபர் முன்பு அமெரிக்க ஜனாதி பதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருப் பதாக எழுதி பரபரப்பை ஏற்படுத்தியவர். தற்போது ரஷ்யாவின் பல்வேறு தரப்புத் தகவல்களின் படி புடின் மிகவும் உடல் நிலை பாதிக்கப்பட்டு இருப்பதாக அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ல் இணையத் தயார்

## ந்து அதிகாரபூர்வ அறிவிப்பு

**டையெடுப்பின் விளைவாக வரும் ஒரு ப்புரிமைக்கு விண்ணப்பிப்பதாக சுவீடன் ள்ளன.**

அதன் கிழக்கு அண்டை நாடுகளுக்கு விரோதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக நேட்டோவில் இருந்து விலகி இருந்தது.

ஒரு அறிக்கையில், சுவீடனின் சமூக ஜனநாயகக் கட்சியினர், பொதுமக்கள் மற்றும் பெரும்பாலான எதிர்க் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

முறையான விண்ணப்பம் சில நாட்களுக்குள் கிடைக்கும்.

ஆனால் சமூக ஜனநாயகவாதிகள் அணு ஆயுதங்களை நிலைநிறுத்துவதையோ அல்லது நேட்டோ தளங்களை நடத்துவதையோ எதிர்ப்பதாக தெரிவித்தார்.

தொடர்ந்து நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில், பிரதமர் மக்தலேனா ஆண்டர்சன், 'கூட்டணியில் சேர்வது சுவீடன் மற்றும் சுவீடன் மக்களின் பாதுகாப்பிற்கு சிறந்தது.

பால்டிக் பிராந்தியத்தில் நேட்டோ உறுப்பினராக இல்லாத ஒரே நாடாக சுவீடன் இருந்தால், அது பாதிக்கப்படக்கூடிய நிலையில் விடப்படும்' என தெரிவித்தார்.

நேட்டோ அமைப்பில் இணைய உள்ளதாக பின்லாந்து நாடு அதிகாரபூர்வமாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

ஜேர்மனி தலைநகர் பெர்லினில் நடைபெற்ற நேட்டோ கூட்டத்துக்குப் பின்னர், பின்லாந்து ஜனாதிபதியும் பிரதமரும் கூட்டாக இதனை அறிவித்தனர். (நி-6)

## 102 வயதிலும் ஓய்வுபெற மறுக்கும் வயோதிபர்



(கன்பேரா)

55 வயது கடந்து விட்டாலேயே பலரும் தமக்கு வயதாகி விட்டதாக மனம் சோர்ந்து போகின்ற நிலையில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 102 வயது வயோதிபர் ஒருவர் தனது தொழிலிலிருந்து ஓய்வுபெற மறுத்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் அவுஸ்திரேலியாவுக்காகப் போராடிய முன்னாள் படைவீரரான பில் ஹொட்க்ஸன் தொடர்பில் பிரித்தானிய டெயிலி மெயில் ஊடகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்திகளை வெளியிட்டுள்ளது.

மரவேலையில் தீவிர ஆர்வம் கொண்ட அவர் கடந்த 15 வருட காலமாக சிட்னி நகரின் தெற்கேயுள்ள சதர்லான்ட் ஷியர் சிறுவர்களுக்கான பொம்மைகளைத் தயாரிக்கும் மற்றும் திருத்தும் நிலையத்தில் பணியாற்றி வருகிறார்.

அவர் அந்த நிலையத்தில் சிறுவர்களுக்கான சிறிய மேசைகள், கதிரைகள், பொம்மை வீடுகள் என்பவற்றை அவர் தனது தொழில் சகாக்களுடன் இணைந்து உருவாக்கி வருகிறார்.

அதே சமயம் ஹொட்க்ஸன் 102 வயதிலும் தனது தொழிலை மேற்கொண்டு வருகின்ற நிலையில் அவரது 79 வயது மகன் தனது பணியிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளார்.

1934 ஆம் ஆண்டில் சிகையலங்காரக் கலைஞராக முதன் முதலாக தொழிலை ஆரம்பித்த அவர் பின்னர் விற்பனைப் பிரதிநிதியாக சேவையாற்றினார். ஹொட்க்ஸனின் மனைவி 5 வருடங்களுக்கு முன்னர் மரணமானதையடுத்து அவர் தனித்து வாழ்ந்து வருகிறார்.

தான் தொலைக்காட்சி பார்ப்பதில்லை எனத் தெரிவித்த அவர், தான் தனது பணியை பொழுது போக்காகச் செய்வதாக குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## கு புற்றுநோய்

### உளவுத்துறை தகவல்



ாதிபதி
னுக்கு
மிகவும்
ா தாக
ர் உள
ரிவித்து

ஸ்டீலி
அமெ
தேர்
தலை
எழுதி
றியவர்.
ன் பல்
கவல்க
மிகவும்
விக்கப்ப
அவர்

குறிப்பிட்டுள்ளார்.

புடினுக்கு மிகவும் நெருக்கமான தன்னார்வலர் ஒருவரும் புடினுக்கு உடல் நிலை இரத்தப் புற்று நோயால் மிகவும் பாதிப் படைந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

கடந்த வாரம் ரஷ்யாவின் வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் பங்கேற்ற ஜனாதிபதி புடின் தொடர்ந்து இருமிக் கொண்டு இருந்தார் என்றும் பச்சை ஆடை யால் கால்களை மறைத்து இருந்தார் என்றும் புகைப்பட வீடியோ காட்சிகள் தெரிவிக்கின்றன. (நி-6)

### வடகொரியாவில்

## கொவிட் தொற்றை கட்டுப்படுத்த இராணுவத்திற்கு கிம் அழைப்பு



(பியாங்யாங்)

வடகொரியாவில் கொவிட் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்த இராணுவத்துக்கு அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன் அழைப்பு விடுத்துள்ளார்.

மக்களுக்கு மருந்துகளை விநியோகிக்க உதவுமாறு இராணுவத்திற்கு கிம் உத்தரவிட்டுள்ளார்.

வடகொரியாவில் கொவிட் தொற்று பரவியுள்ளதாக செய்தி வெளியானதில் இருந்து, இதுவரை 50பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தடுப்பூசி போடப்படாத மக்கள் மூலம் நோய் பரவுவதை மெதுவாக்கும் முயற்சியில் கிம் நாடு தழுவிய முடக்கநிலை கட்டுப்பாடுகளுக்கு உத்தரவிட்ட போதிலும், வடகொரியா 'காய்ச்சல்' என்று குறிப்பிடுவதன் மூலம் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நோய் வாய்ப்பட்டுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, வட கொரியாவில் கொவிட்-19 தொற்றுகள் எதுவும் இல்லை என்று மறுத்த பிறகு, கடந்த வாரம் அதிகாரிகள் நாட்டில் கொவிட் தொற்றுப் பரவலை உறுதிப்படுத்தினர்.

கொவிட் இறப்பு எண்ணிக்கையில் வடகொரியா 'மிகப் பெரும் கொந்தளிப்பில் உள்ளது' என கிம் ஜாங் உன் தெரிவித்தார். (நி-6)

## இந்த ஆண்டு இறுதிக்குள் உக்ரைன்-ரஷ்ய போர் முடிவடையும்

### உக்ரைன் இராணுவ மேஜர் ஜெனரல்

(கீவ்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினை வீழ்த்த சதி நடக்கின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள் போர் முடிவடையும்.

இந்தப் போரில் ரஷ்யா தோல்வி அடைந்தால், ஜனாதிபதி பதவியில் இருந்து புடின் அகற்றப்படுவார். இதன் மூலம் ரஷ்யா வீழ்ச்சி அடையும். புடின் மிகவும் மோசமான உளவியல் மற்றும் உடல் நிலை பாதிப்பில் இருக்கின்றார் என உக்ரைன் இராணுவ மேஜர் ஜெனரல் கைரிலோ புடானோவ் தெரிவித்தார்.

ஸ்கை செய்தி நிறுவனத்திற்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் செல்வதற்கு விசேட பேருந்து சேவைகள்

(கிளிநொச்சி)

தமிழினப் படுகொலை நினைவு தினமான நாளை புதன்கிழமை இன அழிப்பின் சாட்சியங்களாக, தாம் இழந்து போன உறவுகளை நினைந்துருகத் தவிக்கும் பொதுமக்கள், கிளிநொச்சியிலிருந்து முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தைச் சென்றடைவதற்குரிய போக்குவரத்து ஏற்பாடுகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் **காலை 8.00 மணிக்கு முழங்காவிலில் இருந்து புறப்படும் பேருந்து வாடியடி, பரந்தன் ஊடாகவும்**

**காலை 8.30 மணிக்கு பளை நகரில் அமைந்துள்ள தமிழ் அரசுக் கட்சியின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச அலுவலகத்திலிருந்து புறப்படும் பேருந்து புதுக்காடு, இயக்கச்சி, பரந்தன் ஊடாகவும்**

**காலை 9.00 மணிக்கு பரந்தன்சந்தியிலிருந்து புறப்படும் பேருந்து முரசுமோட்டை, கண்டாவளை, புன்னை நீராவி ஊடாகவும்**

**காலை 9.00 மணிக்கு வட்டக்கச்சி சந்தையடியிலிருந்து புறப்படும் பேருந்து புளியம்பொக்கணைச் சந்தி ஊடாகவும்**

**காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக உள்ள தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திலிருந்து புறப்படும் பேருந்து கரடிப்போக்கு, பரந்தன் ஊடாகவும்** முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தைச் சென்றடைந்து, நினைவேந்தல் நிகழ்வுகள் நிறைவுற்றதும் அதே வழித்தடத்தின் ஊடாக மீளத் திரும்பவுள்ளன.

நினைவேந்தலில் பங்கேற்கவுள்ள கிளிநொச்சி மாவட்ட மக்கள், மேற்படி பேருந்துகளைப் பயன்படுத்த முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அறிவித்துள்ளார். (4-6)



முள்ளிவாய்க்கால் நினைவாக முச்சக்கரவண்டி உரிமையாளர்களால் கிளிநொச்சி நகரப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி நேற்று வழங்கப்பட்டது. (படம்:-சப்தசங்கரி)

# திருட்டு சங்கிலியை அடகு வைக்க சென்றவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

திருட்டு சங்கிலியை அடகு வைப்பதற்காக கொண்டு சென்ற நபர் ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல் பெருங்குளம் பிள்ளையார் ஆலயப் பகுதியில் கடந்த சனிக்கிழமை வீதியில் நின்ற இளைஞன் ஒருவரின் ஒன்றே முக்கால் பவுண் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துக் கொண்டு தப்பித்துச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட இளைஞன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த திருட்டுச் சங்கிலியை அடகு வைக்க கொண்டு சென்ற ஒருவர் கைதாகியுள்ளார்.

இருப்பினும் திருட்டு சந்தேக நபர்கள் இதுவரை கைதாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)

# வவுனியாவில் வெசாக் கொண்டாட்டம்

(குருமன்காடு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் வெசாக் பண்டிகை வவுனியாவில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மே மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தில் புத்தரின் பிறப்பு மற்றும் பரிநிர்வாணம் என்பவற்றை நினைவுபடுத்தி வெசாக் தினம் பௌத்தர்களால் முக்கிய ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக வவுனியாவிலும் நகரப் பகுதியில் அமைந்துள்ள போதிதட்சனராமய விகாரையை மையமாகக் கொண்டு வெசாக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

மாவட்ட செயலகம், பொலிஸ் நிலையம், அரச அலுவலகங்கள், நீதிமன்றம், சிறைச்சாலை என்பவற்றுக்கு முன்னால் வெசாக் கூடுகள் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன், வவுனியா நகரிலும் பௌத்த கொடிகள் பறக்க விடப்பட்டு வெசாக் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. (4-6-250)



வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நெல்லியடி பொலிஸாரினால் குளிர்பானம் மற்றும் சிற்றுண்டி வகைகள் பொதுமக்களுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

(படம்:-மகாலிங்கம்)

# கழிவுநீர் தொட்டி நிரம்பியதால் பொதுமக்கள் அசௌகரியம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தை வளாகத்தில் உள்ள பொது மலசலகூடத்தின் கழிவுநீர்த் தொட்டி நிரம்பி கழிவுநீர் வடிவதால்,பொதுமக்கள் மற்றும் சந்தை வியாபாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.



குறித்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்சன் நகரசபையின் கவனத்திற்குக் கொண்டு சென்ற போதிலும் இதுவரை கழிவுநீர்த் தொட்டியில் தேங்கியுள்ள கழிவுநீரை அகற்ற எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி பொதுச்சந்தை வளாகத்தில் உள்ள பொதுமலசல கூடத்தின் கழிவுநீர்த் தொட்டியே இவ்வாறு நிரம்பி மாதக்கணக்கில் மேலதிக கழிவுநீர் வடிந்து வீதி மற்றும் சந்தை வெளிப்புறம் ஆகியவற்றில் தேங்கி நிற்கின்றது.

இதனால் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் தாம் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளன்ர். (4-6-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 220 | 240 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 220 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 280 | 300 |
| தக்காளி | 800 | 1000 | 550 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 120 | 120 |
| கோவா | 230 | 250 | 240 | 300 |
| கரட் | 300 | 340 | 320 | 400 |
| பூசணி | 120 | 80 | 100 | 120 |
| புடோல் | 260 | 240 | 200 | 200 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 300 | 450 |
| பெரிய வெங்காயம் | 170 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 550 | 700 | 500 | 600 |
| வெண்டைக்காய் | 200 | 160 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | 150 | 180 |
| பயற்றங்காய் | 400 | 700 | 400 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 240 | 300 |
| பீற்றூட் | 350 | 240 | 300 | 400 |
| கறிமிளகாய் | 400 | 350 | 240 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 400 | 650 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 320 | 220 | 200 | 280 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 70 | 160 |
| தேசிக்காய் | 800 | 600 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 150 |
| வெங்காயப்பூ | 450 | --- | --- | 320 |
| முள்ளங்கி | 80 | 200 | 120 | 250 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | --- | --- | --- | 150 |

# முன்னணியின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி மன்னாரை சென்றடைந்தது

(மன்னார்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி பவனி நேற்று திங்கட்கிழமை மன்னாரை சென்றடைந்தது.

கடந்த 12 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பமானது. இதன் போது வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் குறித்த நினைவேந்தல் ஊர்தி சென்று முள்ளிவாய்க்கால் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் முள்ளிவாய்க்கால் வாரத்தின் 5 ஆவது நாளான நேற்று குறித்த ஊர்தி மன்னாரை சென்றடைந்தது.




மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன் அஞ்சலி இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கலந்து கொண்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (6-4-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2022-14.06.2022



**வெள்ளை உள்ளமும், விடாப் பிடியான குணமும் கொண்ட மேஷ இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக் கிறார். ஆனால்தனாதிபதிசுக்கிரன், விரயா திபதி குருவுடன் கூடி விரய ஸ்தானத்தி லேயே சஞ்சரிக்கிறார். எனவே வர வைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும்.

# ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துங்கள்!

**மீன - செவ்வாய் சஞ்சாரம்**

வைகாசி 3 ஆம் திகதி, மீன இரா சிக்கு செவ்வாய் செல்கிறார். அஷ்ட மாதிபதியாக இருக்கும் செவ்வாயும் 12 ஆம் இடத்திற்குச் செல்லும் போது, திட்டமிடாது செய்யும் சில காரியங்களில் வெற்றி கிடைக்கும். வீண் பழிகளில் இருந்து விடுபடுவீர்கள். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம், விலை உயர்ந்து உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய் யப்போகிறது. விலகிச் சென்ற சொந்தங் கள் விரும்பிவந்து இணைவர். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள்.

**சனி - செவ்வாய் பார்வைக் காலம்**

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ் வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். எனவே விரய ஸ்தானம் வலுக்கிறது. இதனால் வாங்கிய இடத்தை விற்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு ஏற்படலாம். கோபத்தின் காரணமாக சில நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடலாம். ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துங்கள்.

**புதன் வக்கிர நிவர்த்தியும், ரிஷப சஞ்சாரமும்**

வைகாசி 7 ஆம் திகதி, மேஷ இரா சியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். இதனால் சகோதர ஒற்றுமை பலப்படும். உத்தியோகத்தில் எதிர்பார்ப்புகள் நிறை வேறும். வைகாசி 23 ஆம் திகதி, ரிஷப இரா சிக்கு புதன் செல்கிறார். இதனால் பாக்கிகள் வசூலாகி பரவசப் படுத்தும். காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், வைகாசி 10




ஆம் திகதி உங்கள் இராசிக்கு வருகிறார். இதனால் பணப்புழக்கம் அதிகரிக்கும். எடுத்த காரியம் வெற்றியாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கல்யாண முயற்சி கைகூடும்.

**மகரச் சனியின் வக்கிர காலம்**

உங்கள் இராசிக்கு 10, 11 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியான வர் சனி பகவான். அவர் வைகாசி 11 ஆம் திகதி முதல் மகரத்தில் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. தொழில் வளர்ச்சியில் தடைகள் ஏற்ப டலாம். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்லுங்கள். திட்டமிட்ட பணிகளை குறித்த நேரத்தில் செய்ய இயலாது. வாகனங்களால் தொல்லையுண்டு. வருங்கால நலன் கருதி எடுத்த முயற் சிகளிலும் குறுக்கீடு வரலாம். இக்காலத் தில் சனிபகவானையும், ஆஞ்சநேய ரையும் வழிபடுவது நல்லது. இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் விரதமி ருந்து முருகப் பெருமானை வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும். எடுத்த முயற்சி களில் வெற்றி கிடைக்க வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். குலதெய்வ வழிபாடு குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும். கணவன் - மனைவி உறவு திருப்தி தரும். உறவினர்களையும், உடன் பிறப்புகளையும் அனுசரித்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். சனியின் வக்கிர காலத்தில் மிகுந்த கவனத்தோடு செயற்பட்டால் வீண் பழி உண்டாகாது.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**விடாமுயற்சியும், மன உறுதி யும் கொண்ட ரிஷப இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலை களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் உச்சம் பெற்று லாப ஸ்தானத்தில் சஞ்சரிக் கிறார். அங்குள்ள லாபாதிபதி குரு வோடு சஞ்சரிப்பதால் பொருளாதார நிலை உயரும்.

# எதைச் செய்தாலும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்யுங்கள்

**மீன - செவ்வாய் சஞ்சாரம்**

வைகாசி 3 ஆம் திகதி, மீன் இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு விரயாதிபதி யான செவ்வாய், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது, விரயத்திற்கேற்ற பணம் வந்து சேரும். காரியங்கள் கடைசி நேரத்தில் எப்படியாவது கை கூடிவிடும். நண்பர்கள் உதவுவார் கள். ஊர் மாற்றம், வீடு மாற்றத்துக் கான முயற்சி கைகூடும். பயணங்க ளால் அலைச்சலும் ஆதாயமும் உண்டு.

**சனி - செவ்வாய் பார்வைக் காலம்**

வைகாசி 3 ஆம் திகதி முதல் மாதக் கடைசி வரை, மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். உங் கள் இராசி அடிப்படையில் சனி யோகம் செய்யும் கிரகமாகும். அவர் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்தைப் பார்ப்பதால், எதிர் பார்த்த நல்ல திருப்பங்கள் ஏற்படும். இல்லம் தேடி நல்ல தகவல்கள் வந்து சேரும். அரசு வழியில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கலாம். கடன் சுமை குறையும்.

**புதன் வக்கிர நிவர்த்தியும், ரிஷப சஞ்சாரமும்**

வைகாசி 7 ஆம் திகதி, மேஷ இராசியில் புதன் வக்கிர நிவர்த்தி யாகிறார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியா னவர் புதன். எனவே அவர் வக்கிர நிவர்த் தியாவதால் குடும்பத்தில் சந்தோ சம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர் பதவி கிடைப்பதற்கான அறி குறி தென்படும். வைகாசி 23 ஆம் திகதி அன்று ரிஷப இராசியான உங்கள் இராசிக்கு புதன் வருகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாகும்.




**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

இதுவரை உச்சம் பெற்று மீனத் தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், வைகாசி 10 ஆம் திகதி மேஷ இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது, கொஞ்சம் கவனத்துடன் செயற்பட வேண்டும். யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். மருத்துவச் செலவு கூடும். எதையும் துணிந்து செய்ய இயலாது. உதவி செய்வதா கச் சொன்னவர்கள், கடைசி நேரத் தில் கையை விரிக்கலாம்.

**மகரச் சனியின் வக்கிர காலம்**

உங்கள் இராசிக்கு 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், சனி பகவான். அவர் வைகாசி 11 ஆம் திகதி வக்கிரம் பெறுகிறார். அது அவ்வளவு நல்லதல்ல. பெற்றோர் வழி பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். பாகப்பிரிவினை முடிவுக்கு வராது. எதைச் செய்தா லும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யுங்கள். இம்மாதம் வெள்ளிக்கிழமைகளில் அம்பி கையை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரய ஸ்தானம் வலுப்பெறுவதால் விரயங்கள் அதிக ரிக்கும். வீடு மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை வரலாம். கணவன் - மனைவி உறவு திருப்திகரமாக இருந்தாலும், உறவினர்கள் வாயிலாக சில பிரச் சினைகள் உருவாகும். பிள்ளை களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். பணி புரியும் பெண்களுக்கு கேட்ட சலு கைகள் கிடைப்பது அரிது. நேர் மறைச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்வதன் மூலமாக நினைத்தது நிறைவேறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



### உழவுக்கு வந்தனை செய்

பரமசிவம் பல தொழில்களைக் கற்ற போதிலும் விவசாயமே செய்து வரலானான். அதற்கு வேண்டிய நில புலன்களை அவனது தந்தை விட்டுப் போயிருந்தார்.

ஒரு நாள் பரமசிவத்திற்கு கல்வி கற்பித்த குரு அவனைப் பார்க்க வந்து அவன் நன்கு விவசாயம் செய்வது கண்டு மகிழ்ந்து போனார். ஆனால் பரமசிவமோ" "குருவே! நான் உங்களிடம் கற்ற பல தொழில்கள் வீணாகின்றனவே. அவற்றைப் பயன்படுத்தி வேறு தொழில்களைச் செய்யலாம் என்று நினைக்கிறேன்.

எனக்கு இந்த விவசாயம் பிடிக்கவில்லை என்று கூறினான். குருவும் சிரித்தவாறே "உனக்கு ஞாபக மறதி அதிகம். அதனால் உன்னை எல்லோரும் ஏமாற்றி விடுவார்கள். எனவே உனக்கு ஏற்ற தொழில் விவசாயம் தான்" என்றார்.

பரமசிவமோ "எனக்கு ஞாபக மறதி அதிகமென்றால் நீங்கள் கற்றுக் கொடுத்ததெல்லாம் நினைவில் இருக்கிறதே" என்றான்.

குருவும் "அப்படியா! நான் எல்லாத் தொழில்களையும் குறித்து ஒரு புத்தகம் கொடுத்தேனே. அதைச் கொண்டு வா" என்றார். பரமசிவமும் "அதை நான் என் நண்பன் ஒருவனிடம் கொடுத்தேன். திருப்பித் தருவதாகச் சொல்லி இருக்கிறான்" என்றான்.

குருவும் "சரிதான் போ. இனி உனக்கு அது எங்கே கிடைக்கப் போகிறது? புத்தகமோ பணமோ பெண்ணோ வேறு ஒருவரிடம் போய் விட்டால் திரும்பி வரவே வராது. இது தெரியாதா உனக்கு?" என்று கேட்டார்.

பரமசிவமும் "இதுவும் தெரியும். கொடுத்ததை வாங்கும் சாமர்த்தியமும் எனக்குண்டு" என்று கர்வத்தோடு கூறினான்.

குருவும் "அப்படியா நான் இன்னமும் நான்கு நாட்களுக்குப் பிறகு வருகிறேன். அதற்குள் நான் கொடுத்த புத்தகத்தை வாங்கி வை" எனக் கூறிவிட்டுச் சென்றார்.

பரமசிவம் தன் நண்பனான கண்ணன் என்பவனிடம் போய் "என் குரு கொடுத்தது என்று ஒரு புத்தகத்தை நான் உன்னிடம் கொடுத்தேனே அதைக் கொடு. இப்போது எனக்கு அது தேவைப்படுகிறது" என்றான்.

கண்ணனோ "நீ என்னிடம் எந்தப் புத்தகமும் கொடுத்ததாக நினைவில்லையே. நீயோ என்னிடம் கொடுத்ததாகக் கூறுகிறாய். அப்படி நீ கொடுத்திருந்தால் அது இங்குதான் இருக்கும். வேறு எங்கும் போய் விடாது. இன்று தேடிப் பார்க்கிறேன். இருந்தால் எடுத்து வைக்கிறேன். நாளை வந்து பார் என்றான்.

மறுநாள் பரமசிவம் கண்ணன் வீட்டுக்குப் போனபோது அவன் என் வீட்டில் உன் புத்தகம் இல்லை. எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை" என்றான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




"ஏன் இலக்குவன் வருகையைத் தன்னிடம் தெரிவிக்கவில்லை" என்று மயக்கம் நீங்கிய நிலையில் வினவினான். அங்கதன், நடந்த செய்தியைச் சொல்லி, இனிக் காலம் தாழ்த்தாமல் இலக்குவனை வந்து காண்க என்று வேண்டினான். சினம் தணிந்த நிலையில் இருந்த இலக்குவனைச் சுக்கிரீவன் தோள்கள் ஆரத் தழுவிக் கொண்டான்; அவனைத் தக்க தவிசு ஒன்றில் அமருமாறு வேண்டினான்.

"புல்தரையில் இராமன் படுத்திருக்க, நான் இங்கே பொன் தவிசில் எப்படி அமர்வேன்; அவன் கீரை உணவு உண்ண நான் இங்கே சோறும் கறியும் எப்படி அருந்துவேன்? நான் போய்த்தான் அந்தக் கீரை உணவும் சமைக்க வேண்டும்; அதனால், விரைவில் புறப்படுக" என்றான்; அவன் உபசாரங்களை இலக்குவன் ஏற்றுக்கொள்ளவில்லை.

சுக்கிரீவன் அனுமனிடம் "எஞ்சிய படைகளைத் திட்டிக் கொண்டு உடன் வருக" என்று கூறி விட்டு இலக்குவனோடு சென்று, உள்ள படைகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

இராமனை அடைந்து, அவன் திருவடிகளை வணங்கிக் கால தாமதத்துக்கும், தான் இன்பத்துள் வைகிக் கடமையில் காலம் கடத்தியமைக்கும் சுக்கிரீவன் மன்னிப்பு வேண்டினான்; அவனைத் தன் தம்பி பரதனாகவே மதித்து அவனிடம் இன்னுரை பேசி, அனுமனைப் பற்றி விசாரித்தான்.

அனுமன் பெரும் படையுடன் பின் தொடர்ந்து வருவதாகக் கூறி அவனை மகிழ வைத்தான். இராமனும் அவனை அன்புடன் வரவேற்று ஒரு நாள் ஓய்வெடுத்துக் கொண்டு மறுநாள் வந்து சேருமாறு சொல்லி அனுப்பினான்.

இராமன் அனைவரும் நீங்கியபின் தானும் தன் தம்பியுமாய்ப் பிரிந்த சீதையின் நினைவோடு கவலை நிரம்பியவனாய் அன்றைய பொழுதைக் கழித்தான்.

### சேனைகள் வருகை

சேனைகள் வருகைக்காக இராமனும் இலக்குவனும் காத்து இருந்தனர். சதவலி, சுசேடணன், தாரன், கேசரி, துமிரன், காவட்சன், பணசன், நீலன், தரீமுகன், கயன், சாம்பவன், துன்முகன், துமிந்தன், குமுதன், பதுமுகன், இடபன், தீர்க்கபாதன், வினதன், சரபன் முதலிய படைத் தலைவர் பல திசைகளிலிருந்தும் வானர சேனைகளைக் கொண்டு வந்து குவித்தனர்.

அப்படைகளைச் சுக்கீரிவன் இராமனுக்குக்காட்டினான் "இனிச் சீதை இருக்கும் இடத்தைக் காண்பதற்குக் காலதாமதம் செய்யக் கூடாது" என்று இலக்குவன் கூறினான். நான்கு திசைகளுக்கும் தக்க தலைவர்களின் கீழ் சேனைகளை அனுப்பி வைத்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயல், அது செய்யத் தகுதியுள்ளதாக இருப்பின், அதை நன்றாகச் செய்து முடியுங்கள்.
– ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இதயபூர்வமாக அனுஷ்டிப்போம்

நாளை மே 18. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்.

எங்கள் தமிழ் உறவுகள் கொன்றொழிக்கப்பட்ட நினைவு நாள்.

சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக சொந்த நாட்டில் பேரினவாத ஆட்சியாளர்கள் நடத்திய இன அழிப்பில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் எனப் பாராமல் கொத்துக் குண்டுகளை வீசி கொத்துக் கொத்தாக அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்த பாவத்தை பேரினவாத ஆட்சியாளர்கள் சந்ததி சந்ததியாக அனுபவிப்பர்.

எம் தமிழ் உறவுகளுக்குச் செய்த அந்தப் பாவம் சம்பந்தப்பட்டவர்களைத் தீண்டத் தொடங்கியுள்ளது.

ஆம், போர்க்காலத்தில் ஜனாதிபதியாகவும் பின்னர் பிரதமராகவும் இருந்தவர் சிங்கள மக்களால் துரத்தப்பட்ட வரலாறு மறக்கக் கூடியதன்று.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடக்கின்றபோது, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தன் சொந்த நாட்டில் தலைகாட்ட முடியாதவராக இருக்கிறார் எனில், இதை விட்ட கேவலம் வேறு எதுவாக இருக்க முடியும்.

விடுதலைப் புலிகளை அழித்து விட்டேன். தமிழ் மக்களை அடக்கி விட்டேன் என்று வெற்றி விழாக் கொண்டாடியவர் இன்று சிங்கள மக்கள் தன்னை அடித்துக் கொன்று விடுவார்கள் என்று அஞ்சி, குடும்பத்தோடு தலைமறைவாகி இருக்கிறார் என்றால், அதற்குள் இருக்கக்கூடிய தத்துவம் சாதாரணமானதா என்ன?

இது மட்டுமல்ல, போரை நடத்திய வீரராகக் காட்டப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ இன்று ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய அத்தனை அதிகாரங்களையும் பயன்படுத்த முடியாதவராக, ஏதோ அந்தப் பதவியில் இருக்கவிட்டால் போதும் என்பது போல வெளியில் நடமாட முடியாதவராக இருக்கிறார் என்றால்,

வன்னிப் பெரு நிலப்பரப்பில் உயிரிழந்த எங்கள் உறவுகளின் ஆத்ம பலம் எத்துணை என்பதைப் புரிந்து கொள்வது கடினமன்று.

உண்மை, எம் மக்களைக் கண்டபாட்டில் கொன்றொழித்த கொடுமையும் சரணடைந்தவர்களைக் காணாமல் ஆக்கிய துரோகத்தனமும் சேர்ந்து, காலிமுகத்திடலில் கோட்டா கோ கம என்ற கோசமாக ஒலிக்கிறது.

இந்தக் கோசத்தின் மத்தியிலும் ரோசம் கெட்டு ஆட்சியில் குந்தியிருக்கின்ற அவலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேர்ந்துள்ளதெனில்,

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுத்து படையினரைக் குவித்து அட்டகாசம் புரிந்த அந்த ஆட்சித் தலைவர் இன்று ஜனாதிபதி மாளிகைக்குள் நடுங்கிக் கிடக்கும்போது,

நினைவேந்தலைத் தடுக்கும் உரிமை எவருக்கும் இல்லை என்று; அவரால் நியமிக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கிறார் என்றால், இறைவனின் தீர்ப்பு எவ்வாறு இருக்கிறது. எவ்வாறு இருக்கப் போகிறது என்பதைப் புரிந்து கொள்வது கட்டாயமானதாகும்.

எனவே வன்னிப் பெரு நிலப்பரப்பில் உயிரிழந்த எங்கள் உறவுகளின் ஆத்மாக்கள் புனிதமானவை. அந்தப் புனிதமான ஆத்மாக்களின் நினைவேந்தலை இதயபூர்வமாக அனுஷ்டிப்போம்.

அரசியல் இலாபங்கள், தலைமை இடம் பிடிக்கும் நோக்கங்கள் ஏதுமின்றி எங்கள் உறவுகளை இதயத்தால் தியானிப்போம்.

# 14 அத்தியாவசிய மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவுகின்றது

## 2 மருந்துகளைக்கூட இறக்குமதி செய்ய முடியாத நிலையில் உள்ளோம் – ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

நாட்டில் தற்போது 14 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மருத்துவ விநியோகப் பிரிவுக்கு தற்போது இரண்டு மருந்துகளை கூட இறக்குமதி செய்ய முடியாத நிலை உள்ளதாகவும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் நேற்று விசேட உரையொன்றை ஆற்றியபோதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இருதய நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள், சத்திர சிகிச்சைக்குத் தேவையான சிகிச்சை உபகரணங்கள் உட்பட பல மருத்துவ மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது.

மருத்துவ மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் தேவையான உணவுகளை வழங்கும் வழங்குநர்களுக்கு 4 மாதங்களாக கொடுப்பனவு செலுத்தப்படவில்லை.

அவர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகை 34 பில்லியன் ரூபாய்களாகும். அதே போன்று அரச மருந்துக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த மருத்துவ மருந்துகளுக்கு 4 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை.

அதனால் அவர்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

14 அத்தியாவசிய மருத்துவ மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளமையும் அதில் இரண்டையாவது வழங்க இந்த நேரத்தில் எமது மருத்துவ வழங்கல் பிரிவிற்கு இயலாது உள்ளமை மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது.

இருதய நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்து மற்றும் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்து ஆகியவையே அந்த இரண்டு மருந்துகளாகும். ஆனால் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்திற்கு மாற்று மருந்து எதுவும் இல்லை என்றார். (ம)

# 15 மணித்தியாலங்களாக மின்வெட்டு அதிகரிக்கப்படலாம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

15 மணித்தியாலங்களாக மின்வெட்டு அதிகரிக்கப்படலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்

மின்சாரத் தேவையில் நான்கில் ஒன்றை உற்பத்தி செய்ய எரிபொருளே பயன்படுத்தப்படுகிறது.

இதனால் நாளாந்த மின்வெட்டு இன்னும் சில நாட்களில் 15 மணித்தியாலங்களாக மாறவும் இடமுண்டு. எவ்வாறாயினும், இந்த நெருக்கடியைத் தவிர்க்க நாங்கள் ஏற்கனவே பணத்தைப் பெற்றுள்ளோம் என தெரிவித்துள்ளார். (ம)

# யாழ். பல்கலை மாணவிகள் தங்கியிருந்த வீடு மீது தாக்குதல்

## கொக்குவில் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

4 மோட்டார் சைக்கிளில் வந்த குழு வீட்டுக்குள் புகுந்து ஜன்னல்கள், கதவுகளை சேதப்படுத்தி விட்டு தப்பி சென்றுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை குறித்த வீட்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவிகள் வாடகைக்கு தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-33,104)

# நாட்டில் மீண்டும் மின்வெட்டு அமுல்

(கொழும்பு)

நாட்டில் இன்று மூன்று மணித்தியாலங்கள் நாற்பது நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் கோரிக்கையை அடுத்து இன்றைய மின்வெட்டுக்கான அனுமதி வழங்கப்பட்டதாக அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி. A, B, C, D, E, F, G, H, I, J, K, L, P, Q, R, S, T, U, V மற்றும் W பிரிவுகளில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இரண்டு மணி நேரமும் மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை. 1 மணி நேரமும் 40 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது. (ம)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## இறைவனை நினைப்பதே ஆனந்தம்

❖ பக்தி சாஸ்திரப்படி பக்தன் ஒருவன் முழுமை நிலையை அடைகிறான். அதாவது, இறைவனுடைய அருட்காட்சி கிடைத்ததும், அவனுடைய திருவடி தாமரைகளை தீண்டப் பெற்றதும் இறைவன் ஒருவனுக்கே தான் சொந்தம் என்ற பெருநிலையை அடைகிறான்.

❖ இந்த நிலையை அடைந்ததன் பயனாக பக்தன் முற்றிலும் தூயோனாக மாறி விடுகிறான். இதன் மூலம் வாழ்க்கையில் நோக்கம் நிறைவேறி விடுகிறது என்றாலும் பக்தர்களில் பலர் இறைவனை வழிபடுவதற்கென்றே உலகில் வாழ்ந்து வருகின்றார்கள். இதுவே ஆனந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 67

2016 ஆம் ஆண்டு மாவட்டத்தினுள் 1.321 கி.மீ. நீளத்திற்கு வீதிகள் அமைந்துள்ளன. மொனராகலை மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக விவசாயத் துறையில் (49%) அதைத்தொடர்ந்து சேவைத் துறையில் (35%) மற்றும் கைத்தொழிற்றுறையில் (16%) ஆகும்.

### மொனராகலை மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

மொனராகலை மாவட்டத்தில் சனத்தொகை இன ரீதியாக மற்றும் மத ரீதியாக மாறுபட்டுள்ள விதம் அட்டவணை (R3) இல் காட்டப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய, மாவட்டத்தின் பெரும்பான்மை மக்கள் சிங்களவர்கள் ஆவர். அது மொத்த மாவட்ட சனத்தொகையில் 94.9% வீதமாகும். பௌத்தர்கள் 94.6% அதற்கு அடுத்து இலங்கை முஸ்லிம்கள் 2.1% மற்றும் இஸ்லாமியர்கள் 2.2% ஆகும். தமிழர்கள் (இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்தியத் தமிழர்கள்) 2.9% மற்றும் இந்துக்கள் 2.2%.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி ஊவா மாகாண சபையில் உள்ள மொனராகலை மாவட்டத்திற்கு தேர்தல் ஆணையாளரால் நிர்ணயிக்கப்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் 14 ஆக இருந்தது. திருத்தச் சட்டம் 2017 பகுதி 3 A (2) இன் படி மொனராகலை மாவட்டம் 7 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக் கூடிய வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

மொனராகலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 319 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 451,058 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 64,437 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அட்டவணை(R3): இனம், மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு-மொணராகலை மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | % | மதம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 428,104 | 94.9 | பௌத்தம் | 426,762 | 94.6 |
| இலங்கைத் தமிழர் | 8,206 | 1.8 | இந்து | 11,997 | 2.7 |
| இந்தியத் தமிழர் | 5,001 | 1.1 | இஸ்லாம் | 9,809 | 2.2 |
| இலங்கை முஸ்லிம் | 9,508 | 2.1 | உரோமன் கத்தோலிக்கம் | 1,601 | 0.4 |
| வேறு | 239 | 01 | ஏனைய கிருஸ்தவம் | 859 | 0.2 |
| | | | வேறு | 30 | - |
| மொத்தம் | 451,058 | | மொத்தம் | 451,058 | |

**மொனராகலை மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச்சமூகங்கள்-2012**

| பிரதேச செயலகம் | தமிழர் | முஸ்லிம் |
|---|---|---|
| பிபிலை | 961 | 1015 |
| மடுள்ள | 21 | 0 |
| மெதகம | 72 | 4925 |
| சியம்பலாண்டுவ | 43 | 26 |
| மொனராகலை | 6323 | 341 |
| படல்கும்புர | 3971 | 1742 |
| வெல்லவாய | 577 | 1016 |
| புத்தளை | 420 | 423 |
| கதிர்காமம் | 767 | 17 |
| தணமல்வில | 27 | 2 |
| செவணகல | 25 | 1 |
| மொத்தம் | 13,207 | 9508 |

### மொனராகலை மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம்

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின்படி ஊவா மாகாண சபையில் உள்ள மொனராகலை மாவட்டத்திற்கு தேர்தல் ஆணையாளரால் நிர்ணயிக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் 14 ஆக இருந்தது. திருத்தச் சட்டம் 2017 பகுதி 3 A (2) இன்படி மொனராகலை மாவட்டம் 7 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

பொதுமக்களை எழுத்துமூலம் பிரேரணை சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டு அதன்படி பெற்றுக்கொண்ட 6 பிரேரணைகளும், மொனராகலை மாவட்ட செயலகத்தில் 24.11.2017 ஆம் திகதி காலை நடைபெற்ற கூட்டத்தில் பொதுமக்களின் வாய்மொழிமூல பிரேரணைகள் 13ம் அடங்கலாக, மொத்தமாக 19 பிரேரணைகளை குழு பெற்றுக்கொண்டது.

**மொனராகலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 319 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 451,058 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 64,437 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

பெறப்பட்ட 19 பிரேரணைகளில் சில பூரணமான தகவலகளைக் கொண்டிருக்கவில்லை. இப் பிரேரணைகளில் பலவற்றில் பரிந்துரைக்கப்பட்டிருந்ததாவது, எல்லை நிர்ணயமானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும், பிரதேச செயலக பிரிவு எல்லைகளையும், பிரதேச செயலக பிரிவு எல்லைகளின் பகுதிகளையும், பழைய பாராளுமன்ற தொகுதிகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) அடிப்படையாக்கொண்டு அமைய வேண்டும் என்பதே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேரணைகளில் பரிந்துரைக்கப்பட்ட தொகுதிகளுக்கிடையிலான சனச்செறிவு, விகிதாசாரத்திற்கேற்ப இல்லாமல் இருந்ததையும், 2017 ஆம் ஆண்டு திருத்தச்சட்டத்தின் 3(A) (4) (b) பிரிவின் நோக்கத்திற்கு அமையாமல் இருந்ததையும் குழு அவதானித்தது.பிரேரணைகளில் சில போதுமான தகவலகளைக் கொண்டிருக்காததால் அவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

எல்லை நிர்ணயம் செய்வதற்கு தேவையான மக்கள் தொகை, புவியியல் பிராந்திய தகவல்கள் மற்றும் இயல்பு தகவல்கள் போன்றவை உள்ளுராட்சி அதிகார சபைகள், பழைய பாராளுமன்ற தொகுதிகள் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகள்) அடிப்படையில் அமையாமல் இருந்ததோடு, அவை கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலகப் பிரிவு ஆகிய நிர்வாக பிரிவுகள் அடிப்படையில் அமைந்து இருந்ததால் கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலகப்பிரிவு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு எல்லை நிர்ணயம் செய்ய குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

மக்களின் பிரேரணைகளுக்கு அமைய, குழுவானது உள்ளூர் அதிகாரசபை எல்லைகள் மற்றும் பழைய பாராளுமன்ற தொகுதிகளின் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளின்) எல்லைகள் என்பவற்றை பிரிக்காமல் போதுமானவரை தவிர்த்ததோடு இயலுமானவரை பிரதேச செயலகங்களை இணைத்து தொகுதிகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது.

ஒரு சமர்ப்பிப்பு, தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்தை இனம் மற்றும் பிரதேசத்தின் பரப்பளவு என்பவற்றை கருத்திற் கொண்டு அமைய வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. இப் பரிந்துரை முதன்மைச்சட்டத்திலும் 2017 திருத்தச்சட்டத்திலும் குறிப்பிட்ட நோக்கத்திற்கு ஒத்துப்போவதாக உள்ளதை குழு அவதானித்தது

பெற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளில் 06 சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை, ஏனெனில் அவை எந்தவித முன்மொழிவுகளையும் கொண்டிருக்கவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும்போது, சரித்திர பிரசித்தி பெற்ற பெயர் இடப்பட வேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத்தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது. தீர்மானிக்கப்பட்ட அநேகமான தொகுதிகளின் பெயர்கள் பெறப்பட்ட ஒரு பிரேரணைக்கு ஒத்துப்போகிறது.

**சுருக்கமாகக் கூறினால்5 பிரதேச செயலகங்கள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 5 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 1 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து மொனராகலை மாவட்டம் 7 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.**

(தொடரும்...)

# முள்ளிவாய்க்கால் நினைவாக நல்லூரில் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்) முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாகநடைபெறும்.

குறித்த இரத்ததான முகாம் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்க முடியும் என இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-18)


## சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்புகளுக்கு (ஐ)

076 239 9874

## பார்சல் பேப்பர் விற்பனைக்குண்டு

உணவுப் பார்சலுக்கு உகந்த தரமான வெள்ளைத்தாள் விற்பனைக்கு உண்டு. (ஐ)

தொடர்பு

076 097 3121



## புனித பிலிப்பு நேரியார் ஆலயம் செம்பியன்பற்று

இன்று (17.05.2022) செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழாக்கள் ஆரம்பமாகின்றன

எதிர்வரும் (25.05.2022) புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நற்கருணை விழா இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 26.05.2022 (வியாழக்கிழமை) காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் திருநாள் திருப்பலி இடம்பெறும்.

இத் திருவிழாவிற்கு அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன் அழைத்து நிற்கும்

செம்பியன்பற்று பங்குத் தந்தை, ஆலய அருட்பணி சபையினர் மற்றும் பங்கு மக்கள். (11401)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11283)

076 825 7716 (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 02 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)**

- A9 வீதியில் இருந்து 150m தூரம்
- லேடன் கொம்பனி பின்புறம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரம்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- நல்ல சூழல்
- 20 அடிப் பாதையுடன்

**1 பரப்பு - 5 இலட்சம்** (11394)

074 043 6673

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், உஷன் பகுதியில் அமைந்துள்ள பண்ணை ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய கூலியாட்கள் தேவை. (11403)

076 760 0403

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு மேசன், கூலியாள் மற்றும் கல் அறுக்க கூடியவர்கள் தேவை. (11403)

077 777 0969

## மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்







இலங்கைத் திருநாட்டின்
இணையிலா தலைவனே வருக!
இன்னல் போக்கவந்த
இதயதீபமே வருக!
இருண்ட இலங்கையின்
ஒளிக்கீற்றே வருக!
பொருளாதார மீட்பின்
மதிநுட்பமே வருக!
எதிரிகள் பயந்தோடும்
இராஜதந்திரியே வருக!
அரசியல் தேர்ந்த தலைமகனே வருக!
புதிய பிரதமரே வருக!
கௌரவ ரணில் விக்கிரமசிங்கவே வருக!
நிலையான பொருளாதாரத்துடன்
ஐக்கிய சமாதான வாழ்வு தருக...



(11402)

லயன் இணுவையூர் விநே. தகானந்தன் J.P
உறுப்பினர் - நல்லூர் பிரதேச சபை, யாழ்ப்பாணம்.


எக்சத் ஜாதிக பக்ஷய
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில்**
**60 பரப்புக் காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்
  01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
  02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
  03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.




(11393)

தொடர்பு

**077 623 4204, 077 288 0152, 076 658 3621**


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையிலும் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் ( பார்மசி )
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

தரகர் தேவையில்லை

**பார்வையிடும் நேரம்**
**காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை**




(11384)

**077 814 7389, 077 241 7589 - ஜெயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.